# பத்திரிக்கை செய்தி

## பிரதம மந்திரி திட்டத்தின்கீழ் வீடு வாங்கி சிமெண்ட் மற்றும் கம்பிகள் வழங்க ரூ.700/- லஞ்சம் கேட்டு பெற்ற ஊராட்சி ஒன்றிய மேற்பார்வையாளர் கைது

புகார்தாரர் திரு.விஜயகுமார், திருநாவலூர், உளுந்தூர்பேட்டை வட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டத்தை சேர்ந்தவர். புகார்தாரர் பெயின்டராக வேலை செய்து வருகிறார். புகார்தாரர் பிரதம மந்திரி திட்டத்தின்கீழ் வீடு கட்டி வருகிறார். புகார்தாரர் வீடுகட்டுவதற்கு தேவையான சிமெண்ட் மற்றும் கம்பிகள் வாங்க கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், திருநாவலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பணிபுரியும் திருமதி.சந்திரா, கிடங்கு மேற்பார்வையாளர், அவர்களை சந்தித்தபோது கம்பிகள் வழங்குவதற்காக திருமதி.சந்திரா, கிடங்கு மேற்பார்வையாளர், அவர்கள் தனக்கு லஞ்சமாக ரூ.1,000/- கொடுக்க வேண்டும் என்று கேட்டுள்ளார். புகார்தாரர் தன்னால் அவ்வளவு பணம் கொடுக்க இயலாது என்று கூறியதன்பேரில் லஞ்ச பணத்தை ரூ.700/-மாக குறைத்துள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் திரு.விஜயகுமார் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை கள்ளக்குறிச்சி பிரிவில் புகார் மனு ஒன்று அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 06.07.2023 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது திருமதி.சந்திரா, கிடங்கு மேற்பார்வையாளர் அவர்களிடம் லஞ்ச பணமான ரூ.700/-யை புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.

**PRESS NOTE**

**PANCHAYAT UNION OVERSEES WAS ARRESTED FOR DEMAND AND OBTAINMENT OF BRIBE RS.700/- FOR ISSUING CEMENT AND IRON RODS**

The complainant Tr.Vijayakumar, residing at Thirunavalur, Ulundurpet Circle, Kallakurichi District. Complainant is doing a painter job and who is constructing building under Prime Minister scheme. The complainant went to Panchayat union office and met Tmt.Chandra, Oversees, Thirunavalur village union, Ulundurpet Circle, Kallakurichi district, who demanded Rs.1,000/- as bribe for issuing cement and iron rod. On the request of complainant Tmt.Chandra, Oversees reduced the bribe amount Rs.700/-. Not willing to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Kallakurichi detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized today (06.07.2023). During the trap proceedings Tmt.Chandra, Oversees reiterated her earlier demand and received the bribe amount of Rs.700/- from the complainant. The accused was arrested.